# 2. வினாக்கள்—விடைகள்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**1—**

### தீயணைப்பு நிலையம்

***1565—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் வட்டத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் சுரண்டை ஆகிய மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும்.*

*எனினும், ஆலங்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடிசை வீடுகள் உள்ள காரணத்தாலும், மேலே குறிப்பிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களிலிருந்து ஆலங்குளம் செல்லும் சாலைகள் நல்ல நிலையில் இல்லாததாலும், தீயணைப்பு வண்டிகள் விரைந்து செல்ல முடியாது என்பதாலும் ஆலங்குளத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*[2011 ஆகஸ்ட் 8*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன்.*

*முற்பகல் 10-05*

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அருளும் உண்டு, பொருளும் உண்டு, ஆன்றோர் போற்றுகின்ற நற் குணங்களும் உண்டு, சொற்போரில் வெல்லுகின்ற திறமையும் உண்டு, அயல் நாட்டவரும் போற்றுகின்ற பெருமையும் உண்டு. பார்போற்றும் தமிழகத்தை வாழவைக்கும் பாரதத் தாய் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள அனைத்து மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தொலைநோக்குப் பார்வையோடு நிதிநிலை அறிக்கை தந்து நீதி காத்த தாயே, என்னை மீண்டும் இரண்டாவது முறையாக ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வைத்து வெற்றிபெறச் செய்ய வைத்த தாயே, 2011 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில், முதல் வினாவில் அதுவும் எங்கள் தாயின் வாயிலாக பதில் கேட்கும் அரிய வாய்ப்பாக, ஆலங்குளம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கனவான தீயணைப்பு நிலையத்தினை அமைக்க உத்தரவிட்ட, அன்புத் தாய் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு ஆலங்குளம் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஏறக்குறைய 300-க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். இந்தத் தொகுதி வரலாற்றுச் சிறப்புமிக்க பாரதியார், வீரபாண்டிய கட்டபொம்மன், உமறுப் புலவர் ஆகியோர் பிறந்தும், வரலாறும் படைத்த அந்த பூமியாகும். அப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க ஒட்டப்பிடாரத்தில் இதுவரையிலும் ஒரு தீயணைப்பு நிலையம்கூட தொடங்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவுகூர்ந்து ஒட்டப்பிடாரத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்குவதற்கு ஆணையிடுவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*2011 ஆகஸ்ட் 8]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஆலங்குளம் தொகுதியைப் பற்றியது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையில், திண்டுக்கல் மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் ஏற்கெனவே இருந்த ஆம்புலன்ஸ் வசதி இப்போது இல்லை. 108 ஆம்புலன்ஸ் வந்த பிறகு தீயணைப்பு நிலையங்களில் இருந்த ஆம்புலன்ஸை எடுத்துவிட்டார்கள். அதேபோன்று Recovery van-உம் இல்லை. இரண்டு வாகனங்கள் மோதிக்கொள்கின்றபோது அதிலிருந்து சடலங்களை மீட்பதற்கான Recovery van இல்லை. குறிப்பாக, கிணற்றில் சிறுவர்கள் விழுந்துவிட்டால், குளத்தில் விழுந்துவிட்டால் அவர்களை எடுப்பதற்கு தண்ணீரை உறிஞ்சி வெளியில் எடுத்து விட்டுத்தான் எடுக்கிறார்கள். வெளியில் எடுப்பதற்கு diving suit என்பது மாவட்டங்களில் இல்லை. ஆகவே, பல துறைகளை உள்வாங்கி மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் துறைக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்குப் பரிசீலிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்தத் துணைக் கேள்வியின் மூலமாக தங்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் பதிலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இதைத்தான் நான் பதிலாகச் சொல்லமுடியும். மூலக் கேள்வி ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியைப் பற்றியது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் வேறு கேள்விகளைக் கேட்டால் அதற்கான விடை என்னிடம் தற்போது இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.